தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பட்டதுடன் மற்ற இராணுவ வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. இந்த வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட பீரங்கிக் குண்டுகள், கைக் குண்டு களும் வெடித்தால் பலத்த சேதம் ஏற்பட்டது.

இராணுவ ட்ரக் வண்டிக்குப் பின்பக்கமாக வந்து கொண்டிருந்த வாகனங்களில் இருந்த கூலிப்படையினர் உயிருக்குப் பயந்து யாழ் புகை யிரத நிலையம் வரை ஓடிச்சென்று ரயில் நிலையத்தில் உள்ள மலசல கூடங்களில் புகுந்து உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டுவிட்டனர்.

இத்தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்ததும் இராணுவத் துருப்புகள் இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்கள், கவச வண்டிகள் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்தார்கள். வீதியிலிருந்து இராணுவப் படையினரின் சடலங்களை அப்புறப்படுத்தியதும், வெறித்தனமாக வீதியில் சென்று கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டு இராணுவ வெறியர்கள் தங்களது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

சிங்கள இராணுவத்தினரின் வெறித்தாக்குதலுக்கு முதலாவதாக இலக்காகியது சரித்திரப்புகழ் பெற்ற அடைக்கல மாதா கோயிலாகும். ''ரொக்கெட் லோஞ்சர்கள்'' மூலம் இக்கிறிஸ்தவ தேவாலயத்தினைத் தாக்கி யேசுநாதரின் சுருவத்தினை இந்த வெறியர்கள் உடைத்தனர். கண்ணில் தென்பட்ட கார்களையும் கடைகளையும் வீடுகளையும் தீக்கிரையாக்கினர். யாழ் கூட்டுறவு பண்டகசாலையும் தீயில் நாசமாகியது.

9.4.84

# இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டது 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

ஸ்ரீலங்கா விமானப்படையினர் சுன்னாகத்திலும் தெல்லிப்பழையிலும் அப்பாவி மக்களைச் சுட்டுக்கொன்ற கொலைபாதக நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்குமுகமாக எமது கெரில்லா வீரர்கள் இராணுவ வாகனத்தின் மீது மேற்கொண்ட திடீர்த்தாக்குதல் எதிரிகளுக்குப் பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது.

ஸ்ரீலங்கா பாசிஸ அரசு புதிதாக அமைத்துள்ள கஜபாகு ரெஜிமண்ட் பிரிவைச் சேர்ந்த இராணுவக் கூலிப்படைகளை ஏற்றிக்கொண்டு ஆயுதப்பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்த இராணுவ ட்ரக்வண்டி மீது எமது கெரில்லாப் போர் வீரர்கள் நடத்திய அதிரடித்தாக்குதலில் பதினைந்து அரசு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருபது பேர் மோசமாகக் காயமுற்றனர்.

1984 ஏப்ரல் மாதம் 9-ம் திகதி பிற்பகல் 2 மணி அளவில் யாழ் புகையிரத நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் அரசபடைகளை நிலைகுலையச் செய்தது. பாதையோரத்தில் பாரிய வெடிகுண்டுகள் கொண்ட வான் ஒன்றினை நிறுத்திவைத்து இராணுவ ட்ரக் வண்டி அதனைக் கடக்கும் சமயத்தில் அவை வெடிக்க வைக்கப்பட்டன. இவ்வெடிகுண்டால் ஒரு இராணுவ ட்ரக் வண்டி பூரணமாகச் சிதைக்கப்



அழிக்கப்பட்ட இராணுவ வணடி








யாழ் நகரில் அரச பயங்கரவாதிகளின் தாக்குதல்


EN8606



